DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் வெள்ளிகிழமை 25ம் நாள் சாட்சியாகிய திவ்யா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திவ்யா | வயது | 32 |
| க/பெ. | ஸ்ரீராம் | இனம் | பெண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C. 9/2023**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**குறுக்கு விசாரணை தரப்பில் 25.10.2024 ம.சா.1**

1. நான் எந்த மாதம் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றால் 31.03.2021. நான் தன்னிச்சையாக தான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் வீட்டில் இருந்த அழுத்தம் காரணமாக சென்றேன்.

2. எதிர்மனுதாரர் வீட்டில் அவரது பெற்றோர் மற்றும் எதிர்மனுதாரர் மட்டும் தான் உள்ளார்கள் என்றால் சரியல்ல. அவரது அக்காவும் உள்ளார். எதிர்மனுதாரர் வீட்டில் என்ன அழுத்தம் கொடுத்தார்கள் என்றால் எதிர்மனுதாரருக்கு தாம்பத்திய உறவில் விருப்பம் இல்லை என்று தெரிவித்ததை மற்றவர்களிடம் தெரிவிக்க கூடாது என்று அழுத்தம் கொடுத்தார்கள்.

3. அதனால் நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேனா என்றால் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரி என்னை அடிக்க முயற்சி செய்தார்கள். எதிர்மனுதாரரின் சகோதரி செருப்பால் அடிப்பேன் என்று சொன்னார். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிர்மனுதாரரின் சகோதரி சென்னையில் அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

4. எனக்கு சொரியாசிஸ் தோல் வியாதி உள்ளது என்றால் இல்லை. நான் மருத்துவ சிகிச்சை எடுக்கவில்லையா என்றால் இல்லை. எனக்கு தோல் சம்மந்தப்பட்ட வியாதி உள்ளது என்றாலும், நான் காஞ்சிபுரம் மற்றும் சென்னையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் இல்லை. நான் தினமும் சித்தா ஆயிலை உடல் முழுவதும் பூசி சிகிச்சை எடுத்து வந்தேன் என்றால் இல்லை.

5. நான் தோல் வியாதி காரணமாக 10 முதல் 15 நாட்கள் படுத்த படுக்கையாக இருப்பேன் என்றால் அது பொய். நான் மாதம் இருமுறை ஊசி போட்டுக்கொள்வேன் என்றால் இல்லை. நான் இதற்கு முன்பு எங்கு வேலை செய்தேன் என்றால் 2018 முதல் 2019 ஜீலை வரை சென்னையில் உள்ள ரூபான் நிறுவனத்தில் வேலை செய்தேன். எனக்கு மாதம் எவ்வளவு சம்பளம் என்றால் ரூபாய்.20,000/-.

6. நான் ஏன் வேலையை வீட்டு நின்றேன் என்றால் எனக்கு முதல் திருமணம் விவாகரத்து ஏற்பட்டதாலும், மன அமைதிக்காக வேலைக்கு சென்றதாலும் நான் வேலையை விட்டு நின்றுவிட்டேன். எனது குடும்பத்தில் நான் ஒரே மகள் என்றால் சரிதான். எனது தந்தை என்ன தொழில் செய்கிறார் என்றால் பைனாஸ் தொழில் கூட்டாக செய்து வருகிறார்.

7. நானும், எனது தந்தையின் தொழிலை பார்த்துக்கொள்கிறேன் என்றால் இல்லை. எனது தந்தைக்கு சொந்தமாக வீடு, கார், 2 கோடி மதிப்புக்கு சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. வீடு மற்றும் கார் உள்ளது. எனது தந்தை எதிர்மனுதாரரிடம் எனக்கு தமிழ்நாட்டில் பல இடங்களில் சொத்து உள்ளதாக தெரிவித்துள்ளார் என்றால் அது பொய்.

8. நான் எதிர்மனுதாரருடன் எவ்வளவு நாட்கள் வாழ்ந்தேன் என்றால் 4 மாதங்கள் இருந்தேன். பொங்கள் திருவிழாவிற்கு மட்டும் எனது வீட்டிற்கு சென்றனே. பின்னர் எதிர்மனுதாரருடன் இருந்தேன். நான் எதிர்மனுதாரருடன் 30 நாட்கள் கூட முழுவதுமாக சேர்ந்து வசிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்குள் தாம்பத்தியம் நடந்ததா என்றால் இல்லை. பிப்ரவரி மாதம் நான் கர்பமாக இருப்பதாக எதிர்மனுதாரரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை.

9. நானும், எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பிறகு பெங்களூரில் 15 நாட்கள் தங்கியிருந்தோம் என்றால் 19 நாட்கள் தங்கியிருந்தோம். பெங்களூரில் எங்களுக்குள்

தாம்பத்தியம் ஏற்பட்டது என்றாலும், நான் பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. எனக்கு உள்ள வியாதியை மறைப்பதற்காக எதிர்மனுதாரர் ஆண்மையில் விருப்பம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. எனது முதல் கணவர் மீது என்ன காரணத்திற்காக விவாகரத்து பெற்றேன் என்றால் வேலைக்கு செல்லம்மால் ஏமாற்றி திருமணம் செய்தது, குடிகாரராக இருந்தது, தாம்பத்திய உறவு இல்லம்மால் இருந்தது, படிக்காமல் இருந்தது ஆகிய காரணங்களுக்காக விவாகரத்து பெற்றேன். இருவரும் சேர்ந்து தான் சமரசமாக விவாகரத்து பெற்றோம்.

11. முதல் கணவர் விவாகரத்து வழக்கில் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்றால் திருமணத்திற்கு செலவு செய்த பணத்தில் ரூபாய். 26 லட்சம் கொடுத்தார்கள். எனது பராமறிப்பிற்காக தான் மேற்படி தொகை கொடுக்கப்பட்டதாக உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பணத்தை கொண்டு நான் திருத்தணி GRT கல்லூரிக்கு பக்கத்தில் இடம் வாங்கியுள்ளதாக எதிர்மனுதாரரிடம் தெரிவித்தார் என்றால் சரியல்ல.

12. முதல் கணவர் மீது தெரிவித்த அதே குற்றச்சாட்டை பணம் பறிப்பதற்காக எதிர்மனுதாரர் மீது தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. 2021 ஏப்ரல் மாதம் எங்கள் வீட்டில் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் தனிக்குடித்தனம் வைக்க எதிர்மனுதாரரை கேட்டேன் என்றால் சரிதான். திருமணம் செய்யும் போதே பெங்களுரில் தனியாக வீடு பார்த்து வைப்பதாக சொன்னார்கள்.

13. எதிர்மனுதாரர் உடல் ஆரோகியத்துடன் உள்ளார் என்றாலும், பணம் பறிப்பதற்காக பொய்யான குற்றச்சாட்டை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு வழக்கு எண்.37/2022 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கிற்கு சரிவர ஆஜர் ஆகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் ஒருமுறை தான் வரவில்லை. அதனால் தள்ளுபடி ஆகிவிட்டது. தற்போது அந்த வழக்கை கோப்பில் எடுக்க மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

14. விவாகரத்து வழக்கில் தெரிவித்துள்ள காரணங்களை நிரூபணம் செய்ய முடியாது என்பதால் வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுமாரருக்கு வயதான பெற்றோர் உள்ளார்கள் என்றால் எதிர்மனுதாரின் தந்தை அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்.

15. எதிர்மனுதாரர் தான் அவரது பெற்றோரை கவனித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு போதுமான வசதி , பராமரித்துக்கொள்ள உள்ளது என்றால் சரியல்ல. நான் மருத்துவ செலவிற்காக மனுவில் கேட்டுள்ளேன் என்றால் வருடத்திற்கு 2 லட்சம் கேட்டுள்ளேன். நான் மனுவில் கோரியுள்ள ஜீவனாம்ச தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

16. எதிர்மனுதாரருக்கு ஆண்மை குறைவா அல்லது விருப்பம் இல்லையா என்றால் விருப்பமாக இல்லை. எதிர்மனுதாரர் பலமுறை தாம்பத்தியத்தில் என்னுடன் ஈடுபட்டார் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனு பொய்யான காரணங்களை சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me/before me

in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.